# நகரத்திணை: சுப்ரபாரதி மணியனின் இரு நாவல்கள்

# City Life: Subrabharathimanian ‘s Two Novels

**முனைவர் இரா. காமராசு**
பேராசிரியர் - தலைவர், நாட்டுப்புறவியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

**Dr. R. Kamarasu**
*Professor and Head, Department of Folklore*
*Tamil University, Thanjavur*

## ஆய்வுச் சுருக்கம்

*தமிழில் திணைகளின் எழுச்சியாக நாவல் இலக்கியம் படைக்கப்பட்டு வருகின்றது. ஐவகைநிலங்கள் இயற்கையோடு இயைந்தவை. நவீன வாழ்வு நகரங்களில் உருப்பெருகிறது. சுப்ரபாரதிமணியன் தொடர்ந்து நகரங்களின் கதைகளைச் சொல்லி வருகிறார். அவரின் சாயத்திரை, தறிநாடா ஆகிய இரு நாவல்களும் திருப்பூர் நகரின் வாழ்வையும் வரலாற்றையும் பேசுகின்றன. கைத்தறியால் அடையாளப்பட்ட, நொய்யல் எனும் நதியால் நிலப்பெருமையுற்ற திருப்பூர் எனும் கிராமியம் விசைத்தறிகளால், பனியன் கம்பெனிகளால், சிதைந்து போன அவதியுறு நகரமானதை இவரின் இந்த நாவல்கள் விவரிக்கின்றன. நகரத்திணையினை எழுதும் எழுத்தாளராக சுப்ரபாரதிமணியன் திகழ்கிறார்.*

***முக்கியச் சொற்கள்:*** *நகரத்திணை, நாவல், சுப்ரபாரதிமணியன், திருப்பூர், சாயத்திரை, தறிநாடா, நொய்யல்நதி, கைத்தறி, விசைத்தறி, தேவாங்கர் இன வரைவியல்.*

## Abstract

*The genre of Novel is being created in Tamil as a result of the rise of various land features. Five types of land are compatible with the nature. Modern life takes shape in cities. Subrabharathimanian continues to tell stories of cities. His two novels “Saayathirai” and “Tharinaadaa” talk about the life and history of Tirupur city. In these novels he explicit how Tirupur, a village proud of its land by the river Noyyal, marked by handlooms, was ruined by the banyan companies by the power looms and became a city disgraced by the river Noyyal. Subrabharathimanian is the writer who writes the classification and modern thinking writer of uprooted city.*

***Keywords:*** *City Life, Novel, Subrabharathimanian, Tirupur, Sayathirai, Tharinaada, Hand Loom, Powerloom, Devangar Ethnography.*

**Citation**

Kamarasu, R. “City Life: Subrabharathimanian ‘s Two Novels.” *Journal of Tamil Culture and Literature*, vol. 2, no. 3, 2023, pp. 44-50.

*சுப்ரபாரதிமணியன் (1955) ஐம்பதாண்டுகளாகத் தொடர்ந்து எழுதி வருபவர். கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், பயண இலக்கியம், மொழிபெயர்ப்பு, திறனாய்வு, பத்தி எழுத்து, இதழியல், திரைப்படம்... என கலை இலக்கியப் பன்முக ஆளுமை. அவரின் "கனவு" இதழ் தமிழ்ச் சிற்றிதழ் வரலாற்றில் தவிர்க்க முடியாதது. பல இளம் எழுத்தாளர்களை எழுதத் தூண்டுவதுடன் அவர்களின் ஆக்கங்களை வெளிக்கொண்டு வரவும் துணை நிற்பவர். இடதுசாரி, சனநாயக, யதார்த்தப் படைப்பு முகம் கொண்டவர்.*

**சுப்ரபாரதிமணியனின் படைப்புலகம்**

*இவரும் கொங்கு மண்டலத்தைச் சார்ந்தவர்தான் என்றாலும் கிராமிய வாழ்வையும், பண்பாட்டையும் எழுதும் பிற படைப்பாளிகளிடமிருந்து இவர் மாறுபட்டு பெருநகர வாழ்க்கையைத் தொடர்ந்து எழுதி வருகிறார். அடிப்படையில் தொலைத் தொடர்புப் பொறியாளனான இவர், பணி நிமித்தம் ஹைதராபாத், செக்கந்திராபாத் ஆகிய இரட்டை நகரங்களில் பல்லாண்டுகள் பணியாற்றியவர்.*

*ஒரு வகையில் புலப்பெயர்வு எனச் சொல்லுமளவுக்கு அயல் மண்ணின் வாழ்வை இவர் எழுதி உள்ளார். சுடுமணல், நகரம் 90, வர்ணங்களில் வேறிடம், இன்னொரு நாளை போன்ற படைப்புகள் இந்த இரு பெருநகரங்களின் இருப்பைப் பேசுபவை. அய்டி நிறுவனங்கள், கார்ப்பரேட் கம்பெனிகள், சாதி - மதப் பூசல்கள், தரகு அரசியல், கூலிக்குற்றவாளிகள், வானளாவி நிற்கும் கட்டிடங்கள், சாக்கடையினும் கீழான வாழிடங்கள், கொலைகள், தற்கொலைகள், காமக் களியாட்டங்கள், இரவு விடுதிகள்... என அடையாளப்படும் பெருநகர வாழ்வை, அதன் உள் இயக்கத்தை, மனித உறவுகளின் தகிப்பைத் தன் எழுத்தில் வடித்துவிடுகிறார் சுப்ரபாரதிமணியன்.*

*அவரின் மற்றொரு களம் திருப்பூர். பருத்தி நகரம் - பின்னலாடை நகரம் - பனியன் நகரம். சுப்ரபாரதி மணியன் பிறந்து, வளர்ந்து, தற்போது வாழ்ந்து வருகிற நகரம். அவரின் இளம் பருவத்தில் அது பவானி வட்டாரத்தில் ஒரு பெரிய கிராமம். சோழர் காலத்திலேயே புகழ்பெற்ற நொய்யல் ஆற்று வேளாண்மையில் வெற்றிலையும், காய்கறிகளும், தாழம்பூவும், கீரை வகைகளும் விளைவித்த நிலம். இன்று நொய்யல் நதியும், வளமான நிலமும் முகமிழந்து "வாழாவெட்டி" நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. திருப்பூரில் "வந்து சேர்ந்த" மக்களும், வாழ்ந்து வந்த மக்களும் "நெசவு" எனும் ஆதிக்குடிமைத் தொழிலைச் செய்தனர். கைத்தறி ஆக அவை இருந்தவரை சிக்கல் இல்லை. கடிசைத் தொழிலாக, குடும்பக் குலத் தொழிலாக வயிற்றுப் பாட்டை நீக்கியவைத் தறிகளே. உலகமய, கார்ப்பரேட் உலகில் எல்லாம் இயந்திர மயமானதின் தொடக்கம் தறிகளிலேயே முகிழ்த்தது. விசைத்தறிகள், வித வித எந்திரங்கள், சாயப் பட்டறைகள், டாலர் வணிகம், பெருமுதலாளியம் என அது வளர்ந்தது. பன்னாட்டுக் கம்பெனிகளும் வணிகமும் ஒரு புறம். வாழ்க்கைப் பாட்டிற்கு தமிழ் நாட்டின் பிற இடங்களிலிருந்தும், அயல் மாநிலங்களிலிருந்தும் புலம் பெயர்ந்து வந்து கொண்டே இருக்கும் மக்கள் மறுபுறம். இந்த மாற்றங்களின் விளைவால் திருப்பூர் மக்கள் வாழ்வில் நிகழும் பண்பாட்டுச் சிதைவுகளை சுப்ரபாரதிமணியன் எழுதுகிறார்.*

*"தறி" எனும் மரபுத் தொழிலின் அழிவு 'விசைத்தறி' எனும் பெருவணிகத் தொழிலின் அசுர வளர்ச்சி, இதனால் ஏற்பட்ட சுற்றச் சூழல் மாசபாடு, நொய்யல் கூவமான நிலை,*

*அடித்தட்டு மக்களின் பாதிப்பு எனச் சமூகப் பொருளாதாரத்தைப் பேசுகிறார். அதே வேளை குடும்பச் சிதைவு, பாலியல் மீறல்கள், குழந்தை வளர்ப்புச் சிக்கல்கள், போதையடிமை நிலை, ஆடம்பர, ஆபாச ஆட்டம் பாட்டங்கள் போன்ற பண்பாட்டுச் சீரழிவுகளையும் கவலையோடு சுட்டிக் காட்டுகிறார்.*

*வாழ்வைத் தேடும் அலைகுடிகள் பற்றிய இடப்பெயர்வு இலக்கியம் எனுமொருவகை இலக்கியம் உற்பத்தியாகும் சூழல் இது. தமிழில் இதைக் காத்திரமாக உணர்ந்து வெளிப்படுத்துகிறார் சுப்ரபாரதிமணியன். திருப்பூரில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், வட மாநிலங்களிலிருந்தும் வந்து குவிந்துள்ள மக்கள், ஹைத்ராபாத், செக்கந்திராபாத், மலேசியா என்று தான் கண்டு கேட்டு உணர்ந்த இடங்களும் மனிதர்களும் இவரின் இலக்கியக் களமாகிறார்கள். இடப்பெயர்வின் வலி என்பது ஒரு வகையில் இருத்தலின் தேடல்தானே. மொழி, சாதி, மதம், பால் ... எல்லாவற்றையும் நிலம் எப்படி தாங்குகிறது, என்பதை இந்த எழுத்து நமக்க உணர்த்துகிறது.*

*சுப்ரபாரதிமணியனை நகரத்தை எழுதும் எழுத்தாளர் எனச் சொல்லுமளவுக்கு திருப்பூர் பற்றிய அவரின் ஆக்கங்கள் தொடர்ந்து வெளிவந்து கொண்டுள்ளன. சாயத்திரை (1998), தறிநாடா (2013), நீர்த்துளி (2011) ஆகிய மூன்று நாவல்களும் நொய்யல் மாசுபடாமல் ஓடியது தொடங்கி, வேளாண்மையை மையமிட்ட திருப்பூர் எனும் கிராமத்தில் தொடங்கி அரை நூற்றாண்டு அசுர வளர்ச்சியையும், மாற்றத்தையும் பதிவு செய்கின்றன. சாயத்திரையும், தறிநாடாவும் திருப்பூரின் இன்றைய முகவரிக்குப்பின் உள்ள அவலங்களைச் சித்தரிக்கிறது.*

**சாயத்திரை**

*மரபான கைத்தறி நெசவாளிகளின் நிலமான திருப்பூர், இராட்சத இயந்திரங்கள் கொண்ட விசைத்தறிக் கூடங்களாக, பனியன் தொழிற்சாலைகளாக மாறும் நிலையை ‘‘சாயத்திரை’’ நாவல் பதிவு செய்கிறது. வீடுகளின் அடையாளங்களாகத் திகழ்ந்த கைத்தறிகள் போய், பனியன் கம்பெனிகளாகவும் விசைத்தறியிடங்களாகவும் மாறுவதும் பனியன் தொழிலும், விசைத்தறித் தொழிலும் பெரும் பணக்காரர்கள் கையில் செல்வதும், புதிய பணக்காரர்கள் உருவாவதும் நாவலில் சுட்டப்படுகிறது. மேலும் பாரம்பரியமாக குடும்பத் தொழிலாகக் கைத்தறியில் ஈடுபட்ட நெசவாளிகள் கூலிகளாக, ஏதிலிகளாக மாற்றப்படும் நிலையையும் நாவலின் மூலம் அறியலாம். நிலங்களுக்கு நீர் பாய்ச்சி வளம் தந்த நொய்யல் ஆறு, புதிதாக உருவான சாயப்பட்டறைக் கழிவுகள் கலந்து ‘‘சாயத் திரையாக’’ மாறுவது நுட்பமாகச் சொல்லப்படுகிறது.*

*பனியன் கம்பெனி தொழிலாளி பக்தவச்சலம். தகுதிக்கு எற்ற வேலையில்லாமல், வாழ்வில் ஒட்டுதல் இன்றி வாழ்பவன். வெளிநாட்டிலிருந்து வரும் பெண் பத்திரிகையாளர் ரோசாவுக்கு திருப்பூர் நகரின் மாசுபாட்டை, நொய்யல் ஆற்றின் சீரழிவைச் சுற்றிக் காட்டுவதுடன் நாவல் தொடங்ககிறது. அவன் வாழ்வில் முன்னேற முடியாமல் குழந்தையுடன் இருக்கும் ஒரு விதவையைத் திருமணம் செய்கிறான். அவள் கொண்டுவந்த பணத்தில் வீடுகட்டி, சுவர்களில் அடர்ந்த வனத்தின் படங்களை ஒட்டி அலங்கரிக்கிறான். இதைப் பார்த்து அந்தக் குழந்தைச் சிரிப்பதோடு நாவல் முடிகிறது. அசலைத் தொலைத்து நகலில் சுகம் காணும் மனித மனசு.*

*பனியன் கம்பெனி முதலாளி சாமியப்பன், அவனிடம் வேலைபார்க்கும் பக்தவச்சலம், நாகமணி, ஜோதிமணி, வீடுகளை வாடகைக்குவிடும் செட்டியார், ஜட்டி கம்பெனி முதலாளி பெரியண்ணன், சாயத் தொழிலில் ஈடுபட்டு உடல் புண் அடைந்த வேல்சாமி, குஷ்டரோகிப் போன்ற அவனிடம் உறவுகொள்ளப் பயந்து தற்கொலை செய்துகொள்ளும் அவன் மனைவி சௌந்தரி, என பல கதைமாந்தர்கள். இந்நாவலுக்கு மையமோ நாயக, நாயகியோ இல்லை. மனிதர்களின் பாடுகளும் இயற்கையும் தான் எல்லாம். இயற்கைக்கும் மனிதனுக்குமான மறு உயிர்ப்புப் போராட்டமாக நாவல் விரிகிறது.*

*செட்டியார் எனும் ஒரு பாத்திரம் நாவல் முழுக்க வருகிறது. கால்கள் விளங்காமல் புட்டத்தால் நகர்ந்து வாழ்பவர் இவர். திருப்பூர் மாநகர வாழ்வில் தோற்றுப் போனவர்களின் நிழல். அழுக்கம், துர்நாற்றமும் அவரின் அடையாளமாகிப் போகிறது. அவரோடு யாருக்கம் ஒட்டுறவு இல்லை. பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் உட்பட. அவருக்கும் அவருக்கு உதவி செய்பவர்கள் உட்பட பிறருக்குமானத் தொடர்பு என்பது அவரின் பணம்தான். பண உறவுதான். எல்லாவற்றிலும் சலிப்பு அவருக்கு. கடைசியில் தூக்குப்போட்டுச் செத்துப்போகிறார். இது போல் பல இந்நாவலில். திருப்பூரின் வாழ்வோட்டத்தின் குறியீடுதான் இவையெல்லாம்.*

*திருப்பூர் சாயப்பட்டறைகளுக்கு சுற்றிலும் உள்ள கிராமங்களிலிருந்து ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து, தண்ணீரை உறிஞ்சி, தண்ணீர் கொண்டுவரும் லாரிகள். இந்தத் தண்ணீர் லாரிகளில் அடிபட்டுச் சாகும் நாய்கள், ஆடுகள், கழுதைக் குட்டிகள். சாலைகளில் இந்தக் கோரக் காட்சியை எளிதில் கடந்து போகும் மனிதர்கள். சாயப்பட்டறைகளில் உள்ள கொதிகலன்கள் வெடித்துச் சிதறிப் பலியாகும் மனிதர்கள், சாய நீரைக் குடித்துச் சாகும் நாய்கள், சாய நீரில் புழங்கி, புண்ணாகி, சீழ் வடியும் மனிதர்கள். சாயப்பட்டறைகளால் நிலம் மாசுப்பட்டு கிணறுகளில் குடிநீர் நஞ்சாகும் பரிதாபம், குடிநீருக்கு குடமேந்தி நிற்கும் மக்கள்... சாயம் கொடு விஷமாகி நொய்யலை கருப்பாறாக்கி, பயிர்களை கருப்பாக்கி விடும் அவலம்... என்று தேர்ந்த சமூகவியல் ஆய்வாளர் போல அடுக்கடுக்காய் நிகழ்வுகளைக் காட்டிச் செல்கிறார்.*

*திருப்பூர் பெருநகரின் நரக வாழ்வைச் சித்தரிக்கும் நாவலில் ஆங்காங்கே இப்பகுதி பண்பாட்டு வாழ்வும் பதிவாகிறது. வீடு வாடகைக்கு விடும் செட்டியார் ''தேவாங்கர்'' இனத்தைச் சேர்ந்தவர். செண்டியம்மன், சப்பரம், சப்ரத் திருவிழாவில் அலகுக் கத்திகளை மார்பில் அடித்தாடுதல் போன்றவை இடம்பெறுகின்றன.*

*நாகன் எனும் தொழிலாளி அற்புதமானக் கூத்துக் கலைஞன். அவனால் தொழிலில் நிலை கொள்ள முடியவில்லை. அவனின் நினைவோட்டமாக நாட்டுப்புறக் கூறுகள் உயிர்ப் பெறுகின்றன. நெட்டுக்கும்மி, வட்டக்கும்மி, வைகுந்தக்கும்மி, பெரிமாத்துச் சடங்கு, பூப்பறிநோன்பு, வீரமாத்தியம்மன் கதை, வெத்திலைக் கன்னிமார் கதை போன்றவை நாகன் வழிச் சுட்டப்படுகின்றன.*

*ஆக, ''சாயத்திரை'' நாவல், திருப்பூர் பெருந்தொழில் ஏகாதிபத்தியமாக உருப்பெருவதும், நெசவாளிகள் விளிம்பு நிலையினர் ஆவதும், நொய்யல் அமில ஆறாகி சுற்றுச் சூழல் கெடுவதுமான நிலையினை எடுத்தியம்பும் ஆவணமாகிறது எனலாம்.*

**தறிநாடா**

*இந்நாவல் நெசவுத் தொழிலாளிகளின் வாழ்வியலைப் பேசுகிறது. மரபான கைத்தறி முறை காவு கொள்ளப்பட்டு, விசைத் தறியும், பனியன் கம்பெனிகளும் முளைக்கின்றன. இது இப்பகுதியில் பெருமளவு நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருந்த 'தேவாங்கர் செட்டியார்' இனத்தைப் பெரிதும் பாதிக்கிறது. நெசவாளிகள் அவர்களின் பாரம்பரியத் தொழிலை விட்டு தொழிலாளர்களாக, கூலிகளாக மாறுகிறார்கள். கைத்தறி நெசவுக்கான கூலி குறைக்கப்படுகிறது. இதனை எதிர்த்து நெசவாளர்கள் "நெசவுக்கட்டு" எனும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். இப்போராட்டம் படிப்படியாக வளர்ந்து பெரிய போராட்டமாக மாறுகிறது. இதைக் குறிப்பிட்ட சாதியினர் முன்னெடுத்தாலும், வர்க்கப் போராட்டமாக உருவாகவில்லை. கைத்தறி நெசவாளிகள் தங்கள் உடைமைகளை, உறவுகளை இழக்கிறார்கள். உயிர்பலியும் ஆகிறது.*

*இந்நாவலில் வரும் "அருணாசலம்" போராட்டத்தை சாதியின் எழுச்சியாகப் புரிந்துகொள்கிறார். ராஜாமணி, கல்யாணசுந்தரம் போன்றோர் பொதுவுடைமை இயக்கம் சார்ந்து வர்க்க அரசியலை முன் எடுக்கின்றனர். ரங்கசாமி எனும் தொழிலாளிதான் நாவலின் மையம். அவரின் மனைவி நாகமணி. மல்லி, ராதிகா எனும் இரு மகள்கள். பொன்னு எனும் படித்துப் பட்டம் பெற்ற மகன். தருமன், சோமன், வெள்ளியங்கிரி, கோவிந்தன், ஆறுமுகம், நடேஷ், சிவசாமி போன்ற சக தொழிலாளர்கள் ஆகியோரைக் கொண்டு நாவல் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. ரங்கசாமி மகன் பொன்னு, போராட்டப் படிப்பினைகளை உணர்ந்து, வர்க்க அடிப்படையில் தொழிலாளர்கள் அமைப்பாகத் திரள்வதே தீர்வு எனக் கருதுகிறான். சாதி கடந்து, பிழைப்பு அரசியல்வாதிகளை நம்புவதைவிட்டு தொழிலாளிகள் செயல்பட வேண்டும் எனத் திட்டமிடுகிறான்.*

*பொன்னு பனியன் கம்பெனி, விசைத்தறி ஆகியவற்றைத் தடுக்க முடியாது, மாற்றங்களை உணர்ந்து தொழிலாளிகள் இவற்றில் தங்களை இணைத்துக்கொள்ள வேண்டும் என்றும் சிந்திக்கிறான். கடைசியாக இடதுசாரி தொழிற்சங்க வர்க்கப் போராளியாக மாறுகிறான். குடும்பத் தொழிலில் இருந்தும் விடுபடுகிறான். பழமைக்கும் நவீனத்துக்குமான போராட்டம் நாவலில் நீடிக்கிறது. கைத்தறி து விளைசைத் தறி, குடும்பத்தொழில் x தொழிற்சாலை என்ற நிலையில் மட்டுமல்ல. மனித மதிப்பீடுகளிலும்தான். நாவலில் வரும் ரங்கசாமி மரபின் குறியீடு. எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்பவர். அருணாச்சலம், பொன்னு ஆகியோர் எதிர்த்துப் போராடும் இயல்புக்கு வருகின்றனர். இது தலைமுறை மாற்றம் மட்டுமல்ல, கருத்தியல் மாற்றமும்கூட.*

**நெசவாளர் இனவரைவியல்**

*பஞ்சும் பசியும் நாவலின் குறையாக அதில் பஞ்சும், நூலும் இல்லை என்பார்கள். அதற்கு மாறாக தறிநாடாவில் தறி ஓடிக்கொண்டே இருக்கிறது. தறிக்குழிகள், தறிநாடா, பாவு இலைகள், பில்வார்கள், கஞ்சிப்பசை, எண்ணிட்ட நூல்கள் துண்டுத் துணிகள், ஜரிகை நூல் ஆகியன நாவலில் உயிரோட்டமாக உலா வருகின்றன.*

*தேவாங்கர் செட்டியார்களின் கன்னட வீட்டு மொழியும், தறியில் புழங்கும் சொற்களும், தொன்மங்களும், பழமொழிகளும் நாவலில் இனவரைவியல் கூறுகளாக இடம்பெறுவதைச்*

*சுட்டத்தான் வேண்டும். தேவாங்கர் செட்டியார்களின் குல தெய்வமான சௌண்டி அம்மனும், கோவில் திருவிழாவும், சப்பரம் எடுத்தலும் விரிவாகச் சொல்லப்படுகின்றன.*

**தொன்மம்**

*நாவலின் தொடக்கத்தில் தேவாங்கர் நெசவுத் தொழிலை மேற்கொண்டதற்கு ஆதாரமான தேவாங்கர் புராணம் இப்படிப் பதிவாகிறது:*

*பிரமன் பல புவனங்களையும் உயிர்களையும் படைத்தார். ஆதி மனுவை, பிராமன் ஆடைதரப் படைத்தான். மனு கடமையை நிறைவேற்றிய வேலை முடிந்தது என்று பரம்பொருளிடம் ஐக்கியமானோர் ஆடையின்றிப் பின்னர் தவித்தனர். சிவன் தேவனைப் படைத்தார். திருமாலின் நாபிக்கமலத்தில் தோன்றிய தாமரை நூலை வாங்கிச் சென்று ஆடை நெய்யச் சொன்னார். சிவன் இமயமலைக்குத் தெற்கே சகர நாட்டுத் தலைநகர் ஆமோதா உன் ஊராகும் என்றார். திருமால் தாமரை நூலைத் தந்து பாதுகாப்புக்காக சக்ராயுதம் ஒன்றைக் கொடுத்தார். வரும் வழியில் தங்கியிருந்த ஆசிரமத்தில் இருந்த அரக்கர்கள் சுய ரூபத்தை வஜ்ரமுடி, தூர்மவக்கிரன், தூம்ராச்சன், சித்திரசேனன், பஞ்சசேனன் என்று ஐந்து பேராக மாறி தேவரிடம் இருந்து நூலைப் பறிக்க முயன்றனர். சக்கராயுதத்தை அவர் ஏவ அரக்கர்கள் நிலத்தில் விழுந்த ரத்தத்திலிருந்து ஆயிரக்கணக்கில் தோன்றிப் போரிட்டனர். சக்கராயுதம் செயலற்றுப்போனது.*

*தேவலர் தனக்கு உதவ தாயார் சண்டிகையை எண்ணிப் பிரார்த்தனை செய்தார். ஆயிரம் கோடி சூரிய பிரகாசத்துடன் கிரீடத்துடன் தோன்றினாள் சௌடேஸ்வரி. சூலம், சக்கரம், கத்தி, கதாயுதம் என்று நான்கு கைகளில் மின்னின. அரக்கர்களின் ரத்தம் வெள்ளை, சிவப்பு, மஞ்சள், பச்சை என பல வர்ணமாய் இருந்தன. தேவலர் தன்னிடம் இருந்த நூலை அய்ந்தாய்ப் பிரிந்து வர்ணங்களில் நனைத்துக் கொண்டார். எஞ்சிய அரக்கர்களின் ரத்தத்தை பூமியில் விழாது சிம்ம வாகனம் குடித்து முடித்து சிலிர்த்தது. அப்போது அதன் காதுகளில் ஒட்டியிருந்த இரு துளி ரத்தம் கீழே விழுந்து அதிலிருந்து இரு அரக்கர்கள் தோன்றி வணங்கினர். அவர்களுக்கு மாணிக்கத்தார்கள் என்று பெயரிடப்பட்டு தேவலரின் பணிக்கு வைத்துக் கொண்டார். 'நான் சூடாம்பிகை, நீயும் இன்று உனக்கு நேர்ந்த ஆபத்தில் இருந்து மீண்டாய். எனவே நம் இருவருக்கும் இதுவே பிறந்த நாளாகும்.*

*இதுதான் நெசவாளிகள் குறித்த தொன்மக்கதை.*

*இதேபோல "தொழில் அடிப்படை சாதி" என்ற மனநிலை இவர்களிடம் பதிந்துள்ளதை நாவல் சுட்டிச் சொல்கிறது. பிறந்த குழந்தையைக் குளிப்பாட்டும் தாய், "இந்தக் கைதான் நெசவு செய்து என்னைக் காப்பாற்றும். இந்தக் கால்தான் நெசவு செய்து என்னைக் காப்பாற்றும்" எனச் சொல்லி அதை உறுதி செய்கிறாள். தறிக் குழிகளில் கால் எட்டும் அளவிற்கு வளர்ந்தவுடனே குழந்தைகளைத் தறிகளில் உட்கார வைக்கும் பழக்கமும் உள்ளது. நாவலில் நெசவாளர்களுடன் கவுண்டர் போன்றவர்களின் உறவுகளும் சுட்டப்படுகின்றன. நெசவாளிகளின் பொழுது போக்காக அமையும் சீட்டாட்டமும், பெருக்கான் வேட்டையும் கூட நாவலின் சுவையாக அமைகின்றன.*

*ஆக, தறி நாடா கைத்தெறியின் வரலாறு, நெசவாளர்களின் வாழ்வியல், விசைத்தறியின் வரவு, பனியன் கம்பெனி தோற்றம், அகப்புறப் போராட்டங்கள், இவை மனித உறவில் ஏற்படுத்தியிருக்கும் பண்பாட்டு மாற்றங்கள் ஆகியவற்றை திருப்பூரின் சமகால நிலவியலோடு முன் வைக்கிறது எனலாம்.*

*சுப்ரபாரதிமணியன் தன் மண்ணையும் மக்களையும் மட்டுமல்ல பிற மக்களையும் மனித நேயத்துடன் பதிவு செய்து வருகிறார். பெண்கள், உதிரி உழைப்பாளிக, கைவிடப்பட்டவர்கள் போன்றோர் இவரின் படைப்பில் நாயகத்தன்மை பெறுகிறார்கள். அவர் தமிழ் இலக்கியம், இந்திய இலக்கியம், ஏன் உலக இலக்கியப் படைப்பாளுமையாக தன்னைத் தன் படைப்புகளினூடே நிலை நிறுத்திக்கொள்கிறார் என்பது மிகையல்ல.*

**பயன்பட்ட நூல்கள்**

1. *சாயத்திரை, சுப்ரபாரதிமணியன், காவ்யா பதிப்பகம், சென்னை. 2012*
2. *தறிநாடா, சுப்ரபாரதிமணியன், என்.சிபி.ஹெச், சென்னை. 2013*